

திருவள்ளூர் மாவட்டம் நெமிலிச்சேரி அருகே உள்ள ஹோட்டலில் உணவு அருந்திக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மீது த.வெ.க. நிர்வாகிகளால் சரமாரியாக தாக்கப்பட்டு திருவள்ளூர் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மாற்றுத்திறனாளி புஷ்பராஜ் மற்றும் சிறுவர்களை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் நேரில் சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் தெரிவித்தார்.
உடன் நிர்வாகிகள் கே.ஜெ. ரமேஷ், டி.தேசிங்கு, எஸ்.ஜெயபாலன், ஜி.விமல் வர்ஷன், சி.சு.ரவிச்சந்திரன், சன் பிரகாஷ், சே.பிரேம்குமார், வழக்கறிஞர் எஸ்.மூர்த்தி இளைஞர் அணி கே.சுரேஷ் குமார், பெ. வினோத், டி.கே.பாபு, வே.தியாகராஜன், கு.தமிழ்செல்வி, உள்ளனர்.

# தமிழ்நாட்டிற்கென சிறப்பு CSR ஊக்கத் திட்டம் இல்லை!

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஜூலை 22-

நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்க பாண்டியன், தமிழ்நாட்டின் நிறுவன வரி பங்களிப்புடன் ஒப்பிடுகையில் மாநிலத்தில் மேற்கொள்ளப்படும் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) செலவினம், CSR விதிமுறை மீறல்கள் மற்றும் தொழில் துறை வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு சிறப்பு CSR ஊக்கத் திட்டம் குறித்து மக்களவையில் எழுப்பிய கேள்விகளுக்கு, தமிழ்நாட்டிற்கென தனிப்பட்ட CSR ஊக்கத் திட்டம் கொண்டுவரும் எந்த முன்மொழிவும் தற்போது பரிசீலனையில் இல்லை என்றும், மாநிலத்தின் வரி பங்களிப்புடன் CSR செலவினம் தொடர்புபடுத்தி ஒன்றுய அரசு மதிப்பீடு மேற்கொள்வதில்லை என்றும் ஒன்றிய கார்ப்பரேட் விவகாரங்கள் துறை மற்றும் சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறையின் இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா எழுத்துப் பூர்வமாக பதிலளித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

கடந்த மூன்று நிதியாண்டுகளில் தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது தலைமை யகம் கொண்ட நிறுவனங்களிட மிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த நிறுவன வரி (Corporate Tax) எவ்வளவு? மேலும், இந்த அளவுகோலில் மாநிலங்களுக்கிடையில் தமிழ்நாட்டின் நிலை என்ன?

அதே காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்குள் செலவிடப்பட்டதாக நிறுவ னங்கள் அறிக்கையிட்டுள்ள மொத்த நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (CSR) செலவினத்தின் விவரங்கள் என்ன?

மாநிலத்தின் வரி பங்களிப்புடன் ஒப்பிட்டு இந்த CSR செலவினத்தை மத்திய அரசு மதிப்பீடு செய்துள்ளதா? செய்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 135இன் கீழ் கட்டாய CSR செலவினத்தை மேற்கொள்ளத் தவறிய தமிழ்நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் எத்தனை? அவற்றின் மீது எடுக்கப்பட்ட அபராத நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

16வது நிதிக் குழுவின் அறிக்கையில், தமிழ்நாடு தனது நிதி பங்களிப்பை விட குறைவான நிதிப் பகிர்வைப் பெறும் மாநிலமாக மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதுகுறித்து மத்திய அரசு பரிசீலித்துள்ளதா? அவ்வாறு பரிசீலித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன?

விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் காவிரி டெல்டா போன்ற தொழில்துறை வளர்ச்சியில் பின்தங்கிய தமிழ்நாட்டு மாவட்டங்களுக்கு CSR நிதி செலவினத்தை ஊக்குவிக்கும் வகையில் சிறப்பு ஊக்கத் திட்டம் (Weighted CSRdirection Incentive) கொண்டு வர மத்திய அரசு பரிசீலித்து வருகிறதா? அவ்வாறு இருந்தால் அதன் விவரங்கள் என்ன? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்பறிய அமைச்சரின் பதில் வருமாறு:

கார்ப்பரேட் விவகாரங்கள் துறை மற்றும் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறையின் இணை அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா வழங்கிய பதில்:

2023-24 முதல் 2025-26 வரையிலான நிதியாண்டுகளில் தமிழ்நாட்டில் வசூலிக்கப்பட்ட மொத்த நிறுவன வரி தொடர்பான விவரங்கள் இணைப்பு - Iல் வழங்கப்பட்டுள்ளன.

MCA21 பதிவேட்டில் நிறுவனங்கள் தாக்கல் செய்த ஆண்டு அறிக்கைகளின் அடிப்படையில், 2022-23 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் மாவட்டவாரியான CSR செலவின விவரங்கள் இணைப்பு - IIல் வழங்கப்பட்டுள்ளன.

இல்லை. நிறுவனங்கள் சட்டம், 2013ன் படி, CSR செலவினப் பொறுப்பு என்பது நிறுவனத்தின் நிகர சொத்து மதிப்பு (Net Worth), ஆண்டு வருவாய் (Turnover) அல்லது நிகர லாபம் (Net Profit) ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இது மாநிலத்தின் வரி பங்களிப்புடன் தொடர்புடையதல்ல.

CSR விதிமுறைகள் மீறப்பட்டதாக தகவல் கிடைக்கும் ஒவ்வொரு முறையும், பதிவுகள் ஆய்வு செய்யப்பட்டு, சட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (2023-24, 2024-25, 2025-26) தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மொத்த அபராதத் தொகை 2.36 கோடி ஆகும்.

இந்திய அரசு 16வது நிதிக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்துள்ளது. அந்த அறிக்கையின் பரிந்துரைகள் குறித்து இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான விளக்கக் குறிப்புகள் நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதிக் குழு பரிந்துரைகளின் அடிப்படையிலேயே மாநிலங்களுக்கு வரி பகிர்வு வழங்கப்படுகிறது. கடந்த ஐந்து நிதியாண்டுகளில், எந்த மாநிலத்திற்கும் நிதிக் குழு பரிந்துரைத்த பங்கைவிட குறைவான வரி பகிர்வு வழங்கப்படவில்லை.

தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களான விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் காவிரி டெல்டா பகுதிகளுக்கென தனிப்பட்ட CSR ஊக்கத் திட்டம் கொண்டுவரும் எந்த முன்மொழிவும் தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் இல்லை

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

# நாடக வேசம் கூட வராது – நாளைய உலகம் உம்மை விடாது!

பிரதமரோ, முதல்வரோ பேசும் போது வெளிநடப்பு செய்வது உலக அளவில் ஏற்றுக்கொண்ட ஜனநாயக வழிமுறை.

அதை விடுத்து 'நான் பேசும்போது, கதவைங் பூட்டுவேன்' என்பது சர்வாதிகாரம். சர்வாதிகாரத்தை எதிர்ப்பதற்கு அடையாளமாக 'உடைப்பேன்' என்றால் கை உடைந்து விட்டதா? கொத்துப் பரோட்டா என்பது ஜனநாயகச் சொல்லா? தீ என்றால் நாக்கு சுட்டுவிடுமா?

ஒரு காலத்தில் ஜெயலலிதா தான் மதுராந்தகம் சொக்கலிங்கம், தூத்துக்குடி ரமேஷ், ராணிப்பேட்டை மோகன் என தனது சொந்தக் கட்சி எம்.எல்.ஏ.களையே குறிவைத்து தாக்கினார். அரசுக்கு எதிராகச் சென்றதால் வழக்கறிஞர் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் விஜயன் ஆகியோர் தாக்கப்பட்டார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா முகத்தில் ஆசீட் வீசப்பட்டது.

அந்த வரிசையில் அனிதா ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் மார்க்கண்டேயன் என விரிகிறது.

ஜெயலலிதா பாணியில் ஆட்சி நடத்த துடிக்கும் நீங்கள், அமைச்சரின் மனைவி, உதவியாளர் மனைவியுடன் நெருக்கம் என புகார் வந்தவுடன் அந்த அமைச்சரையே கோட்டையை விட்டு விரட்டினார் ஜெயலலிதா. சசிகலா புஷ்பா நடவடிக்கை தவறுக்காக கட்சியை விட்டும் நீக்கினார் ஜெயலலிதா.

ஆனால் ஒரு மாதமாகியும் தன்னைக் கெடுக்க அழைத்து வரச் சொன்னதே சரவணன் தான் எனச் சொல்லியும், இதுவரை சரவணன் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

'அரசு வழக்கறிஞர் பதவிக்கு என்னிடம் 20 லட்சம் கேட்கிறார்கள்' என த.வெ.க. கட்சியின் நிர்வாகி ஞானசௌந்தரி சொல்லியும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். ஜெயலலிதா மாதிரியே ஆண்டால், ஜெயலலிதா மாதிரியே சிறைக்குப் போக வேண்டியது தான்.

'முட்டாள் முதலமைச்சர்' என பேசிய ஆறு மாதத்தில், 'யார் ரௌடி என்பது தெரியும்' என்று மிரட்டிய ஆதவ் மீது,

'காவல்துறை தான் 41 பேர் இறந்ததற்கு காரணம்' என்று சொன்ன விஜய் மீது –

'செந்தில் பாலாஜி பல்லை உடைப்பேன் சொன்ன அண்ணாமலை மீது நாக்கை அறுப்பேன்' என்று

முதல்வர் விஜய் நடவடிக்கை எடுப்பாரா?

கட்டையைத் தூக்கிக் கொண்டு அடிப்பதற்கு அலைந்தவர் அமைச்சராக இருக்கலாமா?

பெண் பாலியல் செய்த அமைச்சர் பதவியில் நீடிக்கலாமா?

பெண் குழந்தைகளை அவமானப்படுத்த வீடியோ கேமரா உடன் சென்று அமைச்சர் பதவியில் நீடிக்கலாம். வெளியில் உளவலாம்.

ஆனால் நீதி கேட்ட நேதாஜிக்கு சிறையா?

பிடிக்கப்பட வேண்டியவர்கள் - உள்ளே இருக்க வேண்டியவர்கள் வெளியே. பாராட்டுக்குரியவர்கள் உள்ளேயா? எத்தனை நாள் நீடிக்கும் இந்த ஆட்சி?

ஒரு பாரசீக கவிஞன் பனிபடர்ந்த மலையில் ஜோல்னா பையுடன் போகும்போது நாய் ஒன்று குரைத்ததாம். நாயை அடிக்க கவிஞன் குனிந்தால் கற்கள் பனியில் மூடப்பட்டிருந்தது. கவிஞன் சொன்னான், இந்த நாட்டில் நாய்களை அவிழ்த்துவிட்டு, கற்களை கட்டி இருக்கிறார்களே என்று, அது தமிழ்நாட்டிற்குப் பொருந்தும்.



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

கடைசியாக திரைப்படப் பாடல் ஒன்று கண்ணதாசன் வரிகள்

சதிகார கூட்டம் ஒன்று சபையேறக் கண்டேன்

தவறென்று (மார்க்கண்டேயனை) என்னைச் சொல்லும் பரிதாபம் கண்டேன்

அழகாகத் தோன்றும் ஒரு கருநாகம் கண்டேன்

அநியாயம் செய்வோருக்கும் மரியாதை கண்டேன்

நாடக வேஷம் கூட வராது – நாளைய உலகம் இவரை விடாது,

## பெரம்பூர், முரசொலிமாறன் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள

# அறிவியல் தொழில்நுட்பப் பூங்கா (STEM Park)!

## சென்னை பள்ளி மாணவர்களுடன் மேயர் பிரியா பார்வையிட்டார்!



சென்னை,ஜூலை.22-

நேற்று (21.07.2026) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு-74க்குட்பட்ட, பெரம்பூர் நெடுஞ்சாலையில் உள்ள முரசொலிமாறன் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்பப் பூங்காவில் (STEM Park) உள்ள டிஜிட்டல் கோளரங்கம், அறிவியல் சார்ந்த உபகரணங்களை சென்னை பள்ளி மாணவர்களுடன் பார்வையிட்டார்.

இப்பூங்காவானது மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 5.75 கோடி மதிப்பீட்டில் 11,000 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் டிஜிட்டல் கோளரங்கம், நிறை மற்றும் மந்தநிலை (Mass and Inertia), வாட்டர் ஜெட் எரிபொருள், காந்தத்துடன் விளையாடுதல், சைன் அலை, சைக்ளோடிகல் பாதை (Cyclodical Path), நியூட்டனின் 3வது விதி, படிக அமைப்பு, கணித சிற்பம், டிஎன்ஏ மாதிரி, 3டி ஊசல் காசியன் தேற்றம், ஹைப்சோமீட்டர், ப்ரிஹோமேசியன் கியர் ரயில், சோலார் வாட்டர் ஹீட்டர், சூரிய சக்தியில் இயங்கும் ரேடியோ, இசைக் குழாய்கள், அலை இயக்கம், சந்திராயன், மங்கள்யான் உள்ளிட்ட அறிவியல் சார்ந்த உபகரணங்களை சென்னை பள்ளி மாணவர்களுடன் மேயர் அவர்கள் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பூங்காவில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் மேயர் அவர்கள் மரக்கன்றினை நட்டார். பின்னர், பூங்காவினைப் பராமரித்திடவும், சென்னை பள்ளி மாணவர்களை தினசரி அறிவியல் தொழில்நுட்ப பூங்காவிற்கு கல்விச் சுற்றுலா போல் அழைத்து வருமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மண்டல அலுவலர் ஜி.சொக்கலிங்கம், திரு.வி.க. நகர் வடக்கு பகுதி துணை செயலாளர் ஆர்.ராஜன், வட்டச் செயலாளர் எஸ்.புஷ்பராஜ் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.




மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (21.07.2026) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் இருந்து மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெற்று வருவதை முன்னிட்டு, இணையவழியில் சுய விவரங்களைப் பதிவு செய்தார்.

## 'நீயெல்லாம் பத்திரிகையாளரா?'– என

# நாக்கை துருத்தி மிரட்டல் விடுத்த தூத்துக்குடி ஏ.டி.எஸ்.பி.!

## தூத்துக்குடியில் பரபரப்பு!



தூத்துக்குடி, ஜூலை 22–

தமிழக முதல்வர் குறித்து பேசியதால் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கைது செய்து 14 நாள் அதாவது ஆகஸ்ட் 3ந் தேதி வரை நீதிமன்ற காவல் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிக்கையாளர்களை நாக்கை துருத்தி தூத்துக்குடி ஏ.டி.எஸ்.பி. ஒருமையில் பேசியது கண்டனத்துக்குள்ளாகியுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. பொதுக் கூட்டத்தில் முதல்வர் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் பேசியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தமிழக முதல்வர் குறித்து அவதூறு பரப்பும் வகையிலும் மிரட்டல் விடுக்கும் வகையிலும் பேசியதாக தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் காவல்நிலையத்தில் தவெகவினர் புகார் அளித்தனர். இதனையடுத்து தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறையினர் 351(3), 352, 353(2) BNS என்ற மூன்று பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கைது செய்து தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டனர்.

காலை 7:30 மணி அளவில் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கூட்டி வந்த நிலையில், மாலை 6:30 மணிக்கு தான் விசாரணை முடிவு பெற்றது. சுமார் 11 மணி நேரமாக நடைபெற்று வந்த விசாரணை முடிந்து உடல் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். முன் வாசல் வழியாக வராமல் தூத்துக்குடி மார்க்கண்டேயனை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பின்புறமாக உள்ளே அழைத்துச் சென்றனர் போலீசார்.

### துப்பாக்கி முனையில் போலீசார் மிரட்டல்!

தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் அவர் உள்ளே செல்லும் பொழுது என்னை துப்பாக்கி முனையில் மிரட்டுகிறார்கள் என்றும், பிரேத பரிசோதனை அறிக்கை கொண்டு சென்று என்னை கொல்லப் பார்ப்பதாகவும் சொல்லிக்கொண்டே சென்றது பரபரப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து, அவரை நீதிமன்றத்தில் போலீசார் ஆஜர்படுத்தினர். போலீசார். வழக்கை விசாரித்த நீதிபதி அவரை 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில், தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்த தி.மு.க. எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனிடம் பேட்டி எடுக்க பத்திரிகையாளர்கள் முயன்றனர். அப்போது தூத்துக்குடி ஏடிஎஸ்பி திபு பத்திரிகையாளர்களை ஒருமையில் பேசி நாக்கை துருத்தி, நீங்கள் பத்திரிகையாளர்களா? ரவுடிகளை என ஒருமையில் பேசியதோடு, அவர்களை பத்திரிகையாளர்களை பணி செய்யவிடாமல் தடுத்தார். இதனால் பத்திரிகையாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே கடும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 வட்டம் 38 நேதாஜி நகர், வினோபா நகர், ராஜசேகர் நகர், பகுதியில் வட நாட்டைச் சேர்ந்த கட்டிட தொழிலாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்து மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது நேரில் சென்று 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன்.எம்.சி, ஆய்வினை மேற்கொண்டார். உடன் உதவி மருத்துவ அலுவலர் சாய் சுதா, மருத்துவர்கள் சுகாதாரத்துறை அதிகாரிகள் ஊழியர்கள் இருந்தனர்.

## கழக விவசாய அணி துணைச் செயலாளர்

# வி.என்.மணி மனைவி எம்.அலமேலு மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

புதுக்கோட்டை, ஜூலை 22-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கழக விவசாய அணி துணைச் செயலாளர் வி.என்.மணி அவர்களின் மனைவி எம்.அலமேலு அவர்கள் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் மட்டையன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த, கழக விவசாய அணி துணைச்செயலாளர் வி.என்.மணி அவர்களின் மனைவியார் திருமதி எம்.அலமேலு அம்மாள் அவர்கள் நேற்று (21.07.2026) மாலை இயற்கை எய்தினார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அம்மையாரது இறுதி ஊர்வலம், நல்லடக்கம் இன்று (22.07.2026 புதன்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் மட்டையன்பட்டி அம்மையாரது இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.